மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

197—

பொது மருத்துவமனை

***7867—திரு. ஜோசப் சாமுவேல்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் தொகுதியில் பொது மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அம்பத்தூரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் 57 படுக்கை வசதிகள் கொண்ட ஆவடி அரசு வட்ட மருத்துவமனையும், 13 கி.மீ. தொலைவில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அனைத்து சிறப்பு சிகிச்சை வசதிகளுடன் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மேலும், சென்னை மாநகரில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு புறநகர் மருத்துவமனைகள், அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள், மாநகராட்சி மருந்தகங்கள் ஆகியவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் பிற மருத்துவமனைகளில் இருந்து மேற்படி அரசு மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, அம்பத்தூர் தொகுதியில் அரசு பொது மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.*

திரு. ஜோசப் சாமுவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி*

2023 ஏப்ரல் 20]

அதிக மக்கள்தொகை கொண்டதாகும். இது பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்பேட்டைகள் உள்ள நகரமாக உள்ளது. மேலும், இங்கு தினந்தோறும் சுமார் 50,000–க்கும் மேற்பட்ட மக்கள் வந்து செல்கின்றனர். போக்குவரத்து நெரிசல் மிகுந்த இந்தப் பகுதியில் பெரும் விபத்துகள் ஏற்படும்போது, பாதிக்கப்பட்டவர்களை சென்னை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்குள் பெரிய அளவில் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். எனவே, கேட்காமலே கொடுக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசில், அவசியமான அரசு மருத்துவமனையை அமைக்க மறுபரிசீலனை செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கடந்த ஆண்டு இதே மன்றத்தில் விதி 110–ன்கீழ் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அவற்றில் சென்னை மாநகரைப் பொறுத்தவரை 200 வட்டங்களுக்கு 200–ம், மற்ற மாநகராட்சிகள், 63 நகராட்சிகளுக்கு என்று 708 மருத்துவமனைகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தவகையில், சென்னைக்கென்று 200 அனுமதிக்கப்பட்ட மருத்துவமனைகளில் இதுவரை 191 இடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி இடம் தேர்வு செய்து, 160 இடங்களில் மருத்துவமனை கட்டும் பணிகள் முழுமையாக நிறைவு பெற்றிருக்கின்றன. அந்தவகையில் அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியை பொறுத்தவரை பாடி, அத்திப்பேட்டை, கொரட்டூர், மேனாம்பேடு, முகப்பேர் மேற்கு, முகப்பேர் கிழக்கு, ஒரகடம், வரதராஜபுரம், வெங்கடாபுரம் ஆகிய 9 இடங்களில் ஏறத்தாழ தலா 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 2¼ கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவமனைகள் கட்டும் பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 160 மருத்துவர்கள், 160 செவிலியர்கள், 160 சுகாதார ஆய்வாளர்கள், 160 உதவி ஆய்வாளர்களை பணி நியமனம் செய்வதற்கான பணியை தற்போது செய்துகொண்டிருக்கிறார்கள். மிக விரைவில் அந்தப் பணி நியமனங்கள் முடிவுற்றவுடன், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால், 160*

[2023 ஏப்ரல் 20

நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் சென்னையிலும், 450–க்கும் மேற்பட்ட நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் ஒட்டுமொத்த தமிழ்நாடு முழுவதும் ஒரே நாளில் திறந்து வைக்கப்பட இருக்கின்றன. அன்றைக்கு, அம்பத்தூர் தொகுதியிலும் 9 மருத்துவமனைகள் புதிதாக அமைய இருக்கின்றன என்பதை தங்களின் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது தொகுதி 15 வார்டுகள் அமைந்த பகுதியாக இருப்பதால், கூடுதலாக நகர்ப்புற நல வாழ்வு மையங்களை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) கிளை நிலையம் ஒன்று கேட்டார்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 9 மருத்துவமனைகள் வருகின்றன என்றாலும், நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் என்பது, சென்னை மாநகர் போன்ற இடங்களில் அமைய வேண்டியதன் அவசியம் இருக்கிறது. குறிப்பாக, அம்பத்தூரைப் பொறுத்தவரை, அவர் ஏற்கெனவே எடுத்துச்சொன்னதுபோன்று தொழிலாளர்கள் அதிகம்பேர் வசித்துக் கொண்டிருக்கிற பகுதி என்பதால், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று, ஒன்றிய அரசின் அனுமதியினைப் பெற்று, நகர்ப்புற நல வாழ்வு மையம் ஒன்றை அம்பத்தூர் பகுதியில் வருகிற நிதியாண்டுகளில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.